**<u>2026 ஏப்ரல் மாதம் 21– ஆம் தேதி செவ்வாய்கிழமை</u>**

**<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>**

**<u>S.C. நெம்பர் : 131/2025</u>**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 131/2025 | பெயர்: ஜெயசூர்யா<br>த/பெ.சுந்தர் | PW3 | 21.04.2026 |

**<u>சாட்சி M.P.2/2026 மனு 23.03.2026 ம் தேதி அனுமதிக்கப்பட்டதின்பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. எனக்கு அரசு போக்குவரத்துக் கழகத்தில் தினசரி பணி என்றால் சரிதான். சம்பவ காலத்தில் நான் போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து வந்தேன் என்றால் ஒரு வாரத்திற்கு முன்பு பணிக்கு செல்லவில்லை, Duty முடிந்துவிட்டதால் செல்லவில்லை. போலீசார் விசாரணையில் நடத்துநராக வேலை செய்து வருகிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் இரண்டு முறை விசாரித்தார்கள். ஒவ்வொரு முறை விசாரிக்கும்போதும் முதல்முறை சொன்ன சங்கதிகளை தான் சொன்னேன் என்றால் சரிதான். முதல்முறை போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் க.விலக்கு அரசு மருத்துவமனையில் எனது தந்தை மற்றும் தாத்தாவின் உடற்கூறாய்வு செய்தப்போது நான் வெளியில் இருந்தேன், அப்போது என்னை விசாரித்தார்கள்.

2. போலீசார் என்னை விசாரிக்கும்போது நேரம் என்ன இருக்கும் என்றால் சுமார் மதியம் 2 மணிக்கு மேல் இருக்கும். வழக்குச் சம்பந்தமாக போலீசார் என்னை தான் முதன்முதலில் விசாரித்தார்கள் என்றால் இல்லை, எனது பாட்டியையும், எனது அக்காவையும் விசாரித்தார்கள். இரண்டாவது

முறை என்னை போலீசார் எங்கு வைத்து என்னை விசாரித்தார்கள் என்றால் எனது அம்மா உடல்நிலை சரியாகி வீட்டிற்கு வந்தவுடன் என்னையும், எனது அம்மாவையும் விசாரித்தார்கள். சம்பவம் நடப்பதற்கு முன்பு மூன்று நாட்களுக்கு முன்பு நடந்த பிரச்சனை குறித்து போலீசாரிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான், அவ்வப்போது புகார் கொடுத்துள்ளோம்.

3. சாதாரணமாக எனது பாட்டி, தாத்தா வேலையை முடித்துவிட்டு சென்றுவிடுவார்கள் என்றால் சரியல்ல, ஒரு வாரம் இருந்து தான் செல்வார்கள். எனக்கு வாகனம் ஓட்டத் தெரியும் என்றால் இருச்சக்கர வாகனம் ஓட்டத்தெரியும். நடத்துநர் வேலைக்கு செல்ல வேண்டும் என்றால் ஓட்டுநர் உரிமம் வேண்டும் என்றால் தற்போது தான் கேட்கிறார்கள், நான் வேலைக்கு சென்ற சமயத்தில் கேட்கவில்லை. எப்போதும் நடத்துநராக வேலைக்கு சேர்வதற்கு பேட்ச் உரிமம் வேண்டும் என்றால் என்னிடம் நடத்துநர் உரிமம் உள்ளது. எனக்கு சம்பவ காலத்திற்கு முன்பே நான்கு சக்கர வாகனங்கள் ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றாலும், வழக்கிற்காக நான் அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல, என்னிடம் இருச்சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் தான் உள்ளது.

4. போலீசார் விசாரணையின்போது இடப்பிரச்சனை சம்பந்தமான ஆவணங்களை பார்த்தார்களா என்றால் பார்க்கவில்லை. நான் எதிரிகள் ஆக்கிரமிப்பு செய்தது சம்பந்தமாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, அவ்வப்போது பிரச்சனை செய்யும்போதெல்லாம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். வருவாய்துறையில் மனுக் கொடுத்துள்ளேனா என்றால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். எதிரிகளின் வீட்டிற்கு வடக்குப் பக்கத்தில் அரசாங்கத்தால் ஓடைக்காக சுவர் கட்டப்பட்டுள்ளது என்றால்

எங்கள் இடத்தை விட்டு தள்ளி கட்டியுள்ளார்கள். அந்த இடம் எங்கள் இடம் என்பதை காட்ட போலீசாரிடம் ஆவணங்கள் கொடுத்தேனா என்றால் இல்லை.

5. எனது அப்பா விற்பனை செய்த கிரைய பத்திரத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த இடத்திற்கு பத்திரத்தில் நான்கு எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வடக்கு திசையில் ஓடை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சம்பவ தேதியன்று எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தேன் என்றால் நான் வெளியில் செல்லவில்லை, வீட்டில் தான் இருந்தேன். நான் வீட்டிற்குள் படுத்து இருந்தேனா அல்லது வீட்டிற்கு வெளியில் படுத்து இருந்தேனா என்றால் நான் வீட்டிற்குள் தனி அறையில் படுத்து இருந்தேன், எனது அப்பா மற்றும் தாத்தா தனி அறையிலும், எனது அம்மா, பாட்டி ஆகியோர் தனி அறையிலும் படுத்து இருந்தோம்.

6. வீட்டிற்குள் நுழைந்த உடன் எனது அறை வீட்டின் வலது பக்கத்தில் உள்ளதா என்றால் இல்லை, வீட்டின் உள்ளே தள்ளி உள்ளது. நான் படுத்திருக்கும் அறைக்கு மேற்கு பக்கத்தில் எனது பாட்டி படுத்து இருந்த அறை என்றால் சரியல்ல, கிழக்கு பக்கம் உள்ள அறையாகும். எனது வீட்டு வாசலுக்கும், எதிரியின் வீட்டு வாசலுக்கும் எவ்வளவு தூரம் என்றால் 2, 3 அடி தூரம் இருக்கும். எனது தாயார் காயம்பட்டு இருந்த இடத்திற்கும், நான் அடிப்பட்ட இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் நான் வாசலில் நின்று கொண்டிருந்தேன், எனக்கு கிழக்குப் பக்கம் 3, 4 அடி தூரம் தள்ளி இருந்தார். எனது தாயார் இருந்த இடத்திற்கு எந்த திசையில் எனது தந்தை கிடந்தார் என்றால் எனது தாயார் இருந்த இடத்திற்கு தெற்கு பக்கம் சுமார் 3, 4 அடி தூரத்தில் இருந்தார்.

7. எனது தந்தை இருந்த இடத்திற்கு எந்த திசையில் எனது தாத்தா கிடந்தார் என்றால் எனது தந்தைக்கு மேற்கு பக்கம் 3, 4 அடி தூரத்தில் கிடந்தார். சம்பவம் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்தது என்றால் சரியல்ல, சுமார் 1/2 மணி நேரம் இருக்கும். இந்த அரைமணி நேரத்திற்குள் காவல்துறையை அணுக முயற்சித்தேனா என்றால் இல்லை. 108 ஆம்புலன்ஸிற்கு அழைப்பு செய்ய முயற்சித்தேனா என்றால் இல்லை. எனது தந்தை கிடந்த இடத்திற்கும், கொட்டகைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 8 அடி இருக்கும். அந்த 1/2 மணிநேரம் இருதரப்பினரும் ஆங்காங்கே போய் கொண்டு இருந்தோம் என்றால் சரிதான், எதிரிகள் வீட்டிலிருந்து சான்று பொருட்களை கொண்டு வந்தார்கள். இருவீட்டிற்கு இடையில் இரத்தம் சிதறிக்கிடந்தது என்றால் சரியல்ல, எங்கள் வீட்டு வாசலில் அவர்கள் காயம்பட்டு கிடந்த இடத்தில் இரத்தக்கறை இருந்தது.

8. இரத்தக்கறை இருந்த இடத்திற்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 2 அடி தூரம் இருக்கும். எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டதா என்றால் காதில் கடித்ததால் இரத்தக்காயம் ஏற்பட்டது. அந்த காயத்தினால் எனது உடையில் இரத்தக்கறை ஏற்பட்டதா என்றால் இல்லை, அவ்வளவு பெரிய காயம் இல்லை. மூன்று நபர்களும் அடிப்பட்டு கிடந்த இடத்தில் இரத்தக்கறை இருந்தது என்றால் சரிதான். என்னை சம்பவ இடத்தில் வைத்து போலீசார் விசாரித்தார்களா என்றால் 06.05.2025ம் தேதியன்று வீட்டில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் சம்பவ தேதியிலிருந்து 6ம் தேதிவரை நான் எங்கு இருந்தேன் என்று கேட்டார்களா என்றால் இல்லை.

9. நான் உத்தமபாளையம் மருத்துவமனைக்கு சென்ற போது எதிரி குடும்பத்தார் அங்கு இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால்

தெரியாது. நான் உத்தமபாளையம் மருத்துவமனைக்கு செல்லும்போது மருத்துவர் என்னை பார்த்தார்களா என்றால் இல்லை. க.விலக்கு மருத்துவமனையில் மருத்துவர்கள் என்னை பார்த்தார்களா என்றால் இல்லை. நான் உத்தமபாளையம் மருத்துவமனை மற்றும் க.விலக்கு மருத்துவமனையில் உள்ள மருத்துவர்களிடம் எனது தந்தை, எனது தாத்தா ஆகியோர்களுக்கு எங்கு காயம்பட்டது என்று எப்படி காயம்பட்டது என்று சொன்னேனா என்றால் சொல்லவில்லை.

10. உத்தமபாளையம் மருத்துவமனைக்கு அருகில் காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். காவல்நிலையத்தை தாண்டி உத்தமபாளையம் மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். உத்தமபாளையம் மருத்துவமனையில் எனது தந்தைக்கு முதலுதவி வழங்கப்பட்டது என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் காவல்நிலையத்தில் தகவல் சொல்ல நான் முயற்சித்தேனா என்றால் இல்லை. உத்தமபாளையம் மருத்துவமனைக்கு சென்ற பிறகு காவல்நிலையத்திற்கு தகவல் கொடுக்காததற்கு தனிப்பட்ட காரணங்கள் உண்டா என்றால் இல்லை, எனது தந்தை உயிருக்கு போராடிக்கொண்டிருந்ததால் அவரை கவனித்துக்கொண்டிருந்தேன்.

11. போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற வாக்குமூலத்திலும் நான் பார்த்த பொருட்களின் அடையாளங்களை சொன்னேனா என்றால் சொன்னேன். போலீசார் விசாரணையில் எதிரிகள் சென்ற வாகனத்தின் பதிவு எண்ணை சொன்னேனா என்றால் சொன்னேன். எனக்கு ஹாலோபிளாக் கல்லிற்கும், ஃபேவர்பிளாக் கல்லிற்கும் வித்தியாசம் தெரியும் என்றால் தெரியும். ஹாலோபிளாக் கல்லின் உட்பகுதி வெற்றிடமாக வீடு கட்டுவதற்கும், மதிற்சுவர் எழுப்புவதற்கும் உபயோகப்படும் என்றால் வீடு கட்டுவதற்கு

பயன்படுத்துவார்கள், தரையிலும் பதிப்பார்கள். ஃபேவர்பிளாக் கல் சிமெண்ட் சாலைகளுக்காக பதிக்கக்கூடியது என்றாலும், அதற்கு தனி பேட்டர்ன் உள்ளது என்றால் தரைக்கும் பதிக்கலாம். ஹாலோபிளாக் செவ்வக வடிவில் உள்ளது என்றால் செங்கல் வடிவில் உள்ளது. செங்கல் வடிவில் செங்கல் அளவில் உள்ள கல்லிற்கு ஆஷ்கல் என்று சொல்வார்கள் என்றால் தெரியாது.

12. செங்கல் செவ்வக வடிவில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சா.பொ.8 கல் பல்வேறு கோணங்களில் உள்ளது என்றால் சரிதான். அது ஒழுங்கற்ற அமைப்பை உடைய கல் என்றால் இல்லை. இவ்வழக்கில் எதிரிகளுக்கு பிணை கொடுக்கக்கூடாது என்பதற்காக வழக்கறிஞர் வைத்து மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மறுப்பு தெரிவித்தோம் என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் தனியாக வழக்கறிஞர் வைத்து வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் சம்பவத்திற்கு 10 நாட்களுக்கு முன்பு தாத்தாவும், பாட்டியும் வந்தார்கள் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். போலீசார் விசாரணையில் வீட்டிற்கு வடக்குப்பக்கமும், தெற்குப் பக்கமும் சுமார் 8 அடி காலியிடம் உள்ளது என்றும், அந்த இடம் எங்கள் இடம் என்றும், அந்த இடத்தை 2, 3 எதிரிகள் ஆக்கிரமிப்பு செய்து பயன்படுத்தி வந்தார்கள் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

13. போலீசார் விசாரணையில் 28.04.2025ம் தேதியன்று 1வது எதிரி பார்த்திபன் இராணுவத்திலிருந்து விடுமுறைக்கு அனுமந்தன்பட்டிக்கு வந்திருந்தார் என்றும், அப்போது இடப்பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு பார்த்திபன் இருச்சக்கர வாகனத்தில் வேகமாக எங்கள் வீட்டின் முன்பு அந்த பக்கம், இந்த பக்கம் அவ்வாறு சென்றுக்கொண்டிருந்தார் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

அவர் ஊருக்கு வந்த நாளிலிருந்தே எங்கள் வீட்டிற்கு முன்பு வந்து அசிங்கமாக திட்டி பிரச்சனை செய்து வந்ததாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 1வது எதிரி பார்த்திபன் ஓடிவந்து எங்கள் வீட்டின் வாசலில் நின்றுக்கொண்டிருந்த எனது தந்தை சுந்தரை காலால் எட்டி உதைத்து கீழே தள்ளவிட்டார் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

14. 1வது எதிரி பார்த்திபன் 2, 3 எதிரிகளிடம் கட்டை மற்றும் கம்பு எங்குள்ளது என்று கேட்டுக்கொண்டே எதிரிகளின் வீட்டிற்கு சென்றார் என்று போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 3வது எதிரி கையில் வைத்திருந்த அடிகுழாய் இரும்பு பைப்பை வைத்து எனது தாத்தா முத்துமாயன் உடம்பில் மாறி மாறி அடித்து, உடல் முழுவதும் இரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்று போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 1வது எதிரி பார்த்திபன் அவரது வீட்டிற்குள் சென்று பட்டாக்கத்தியை எடுப்பதற்குள் எனது தாத்தா கையையும், காலையும் அசைத்தார் என்பதற்காக அவன் இன்னும் உயிருடன் இருக்கான் என்று சொல்லிவிட்டு அங்கிருந்த ரோட்டில் பதித்திருந்த ஹாலோபிளாக் கல்லை எடுத்து எனது தாத்தா முத்துமாயனின் தலையில் ஓங்கி போட்டார் என்று போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

15. 1வது எதிரி எனது தந்தை சுந்தரின் தலையில் மாறி மாறி 4, 5 முறை வெட்டினார் என்று போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது தந்தை கையால் தடுக்கும்போது 3வது எதிரி விஜயா வைத்திருந்த அடிகுழாய் இரும்பு பைப்பை இரண்டு கைகளையையும் மாறி மாறி அடித்ததால் எனது தந்தைக்கு இரண்டு கைகளும் உடைந்து இரத்த வெள்ளத்தில மயங்கிவிட்டார் என்று போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். இரத்த வெள்ளத்தில் கிடந்தவர்களை

நான் தூக்கி மடியில் வைத்து பார்த்தேனா என்றால் இல்லை. ஆம்புலன்ஸ் வரும்வரை நான் தொட்டுப்பார்க்கவில்லை என்றால் சரிதான். வலது காதின் கீழ்பகுதியில் 1வது எதிரி கடித்ததாக குறிப்பிட்டு போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

16. ஆம்புலன்ஸ் வருவதற்கு முன்பே ஆட்கள் கூடிவிட்டார்களா என்றால் பக்கத்தில் இருந்த 4, 5 நபர்கள் வந்தார்கள். எனக்கு கத்தி, அரிவாள், வாள், பட்டாக்கத்தி ஆகியவற்றிற்கான வித்தியாசம் தெரியும் என்றால் தெரியும். ஒவ்வொன்றும் வெவ்வேறு அமைப்புகள் உடையன என்றால் சரிதான். அரிவாள் வீட்டில் உபயோகப்படுத்தப்படும் என்றால் சரிதான், பொதுவாக வீட்டில் தேங்காய் உறிக்க பயன்படுத்துவார்கள். எங்கள் வீட்டில் அரிவாள், பட்டாக்கத்தி, வாள் உள்ளன என்றாலும், அதை நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை ஆயுதங்களை அடையாளங்களை காட்ட போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பிறகு எத்தனை நாட்கள் கழித்து ஆயுதங்களின் அடையாளங்களை காட்ட விசாரித்தார்கள் என்றால் 02.05.2025ம் தேதியாகும். நானும் அடையாளம் காட்டினேன் என்றால் சரிதான்.

17. காவல்நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டினேன் என்றால் இல்லை, சம்பவ இடத்தில் வைத்து அடையாளம் காட்டினேன். அவ்வாறு அடையாளம் காட்டிய பொருட்களை தான் நீதிமன்ற விசாரணையிலும் அடையாளம் காட்டினேன் என்றால் சரிதான். நான் சொன்னவாறு சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், நானும், எனது குடும்பத்தாரும் சேர்ந்து எதிரிகளின் குடும்பத்தாரை தாக்கி, எதிரிகளின் அப்புறப்படுத்தி வீட்டை சட்டவிரோதமாக எடுக்க முயற்சித்தோம் என்றாலும், அதன்காரணமாக எதிரிகளுக்கு விடப்பட்ட பாதையை அவர்கள்

பயன்படுத்தக்கூடாது என்று தகராறு செய்தோம் என்றாலும், அந்த விரோதத்தின் காரணமாக எனது தாத்தா அனைவரையும் வரைவழைத்து எதிரிகள் தாக்கப்பட்டார்கள் என்றால் சரியல்ல.

18. எதிரிகள் காயம்பட்ட பின்பு ஊர்க்காரர்களால் காப்பாற்றி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட பின்பு, அங்கிருந்தவர்களுக்கும், எங்கள் குடும்பத்தாருக்கும் ஏற்பட்ட தகராறில் தான் என் குடும்பத்தாருக்கு காயம் ஏற்பட்டது என்றாலும், அதை நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இருந்தால் கைது செய்யப்படுவேன் என்பதால் அங்கிருந்து சென்றுவிட்டு அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல, நான் மருத்துவமனையில் இருந்தேன். இவ்வழக்கில் காண்பிக்கப்பட்ட ஆயுதங்களும், எங்கள் வீட்டிலிருந்து எடுத்து இவ்வழக்கில் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எதிரிகள் அவர்களது வீட்டிலிருந்து எடுத்து வந்தார்கள். உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 21.04.2026 ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI Digitally signed by G SREE DEVI Date: 2026.04.21 17:26:39 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
21.04.2026